DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

DVC.No.2/2022

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | ஜெயக்குமாரி | Taluk | |
| Husband 's Name | முரளி | Village | |
| Age | 40 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **12.02.2026.** | | | |

(Respondent present)

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எதிர்மனுதாரருடன் 09.09.2021 ல் திருமணமாகி, அவருடன் சேர்ந்து 48 நாட்கள் வாழ்ந்துள்ளேன். நான் அவருடன் திருமணமாகி, வெறும் 5 நாட்கள்தான் வாழ்ந்துள்ளேன் என்றாலும், நான் வழக்கிற்காக அவருடன் சேர்ந்து 48 நாட்கள் வாழ்ந்துள்ளேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் திருமணமாகி 2வது நாளே எதிர்மனுதாரரை, அவரது குடும்பத்திடமிருந்து பிரித்து தனிக்குடித்தனம் அழைத்துச் செல்ல தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கு இது 2வது திருமணம் என்றாலும், எதிர்மனுதாரருக்கு முதல் திருமணம் என்றாலும் சரிதான். எனது முதல் திருமணத்தை தொடர்ந்து, எனது முதல் கணவருடன் சேர்ந்து 15 நாட்கள் மட்டும் தான் வாழ்ந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கும், எதிர்மனுதாரருக்கும் நடந்த நிச்சயதார்த்தத்தின்போது, அவருக்கு 2 சவரனில் எனது வீட்டிலிருந்து, தங்க சங்கிலி போட்டார்கள் என்றால் சரிதான்.

2. நான் திருமணமான 2வது நாளிலிருந்தே தனிக்குடித்தனம் செல்ல வேண்டும் என்று கேட்டதனால், எதிர்மனுதாரர் முரளி மேற்படி தங்க சங்கிலியை அடமானம் வைத்து, அவரது வீட்டிற்கு பின்புறம் உள்ள அவர்களது மற்றொரு வீட்டினை சரி செய்வதற்காக பயன்படுத்திக்கொண்டார் என்றாலும், அதன் பிறகு அதனை மீட்டு அவரிடம் வைத்துள்ளார் என்றாலும் சரியல்ல. நான் 5 நாட்கள் மட்டுமே அவரிடம் சேர்ந்து வாழ்ந்துவிட்டு, அதன்பிறகிலிருந்து எனது அம்மா வீட்டில்தான் வாழ்கிறேன் என்றால், சரியல்ல, நான் திருமணமாகி முதல் 20 நாட்கள் அவருடன் தான் சேர்ந்து வாழ்ந்தேன், அதன்பிறகு அவர் தான் என்னை என் அம்மா வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டார். அதன் பிறகு மீண்டும் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து 25 நாட்கள் அவர் வீட்டிலேயே தான் வாழ்ந்தேன். அதன் பிறகு தீபாவளி வந்துவிட்டதனால், அவர்

என்னை எனது வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டார். அதன் பிறகு, மீண்டும் தீபாவளி முடிந்து நான் திரும்பி வந்து, எதிர்மனுதாரருடன் 3 நாட்கள் சேர்ந்து வாழ்ந்தேன், ஆக மொத்தம் 48 நாட்கள் அவருடன் வாழ்ந்தேன். நான் உண்மையிலேயே அவருடன் 5 நாட்கள் தான் சேர்ந்து வாழ்ந்தேன் என்றாலும், ஆனால் வழக்கிற்காக பொய்யாக 48 நாட்கள் அவருடன் வாழ்ந்தேன் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர், எனது அம்மா வீட்டில் கொண்டுபோய் விடவேயில்லை என்றாலும், நான் அவரை மதிக்காமல் தன்னிச்சையாக எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றாலும் சரியல்ல.

3. நான் மேற்படி 5 நாட்கள் சேர்ந்து வாழ்ந்தபோது கூட, கணவருடன் நான் மனைவிக்குரிய கடமைகளை செய்யாமல், மனைவியாக வாழாமல் இருந்தேன் என்றால் சரியல்ல, என்னை அவர் நான் அவருடன் வாழ்ந்த 48 நாட்களும் மனைவியாகவே நடத்தவில்லை, என்னை எனது பெயர் சொல்லிக்கூட அவர் அழைத்ததில்லை, பைத்தியக்காரி என்றுதான் சொல்லி அழைத்தார், அதோடு மட்டுமல்லாமல் என்னை காலால் எட்டி உதைப்பது, அசிங்கமான வார்த்தைகள் சொல்லி பேசுவது, எனது நடத்தையை பற்றி தவறாக பேசுவது, எனது உருவத்தை பற்றி தாழ்த்தி பேசுவது, எனது நரைமுடியை பார்த்து கிழவி என்று கூறுவது என்று பலவாறாக என்னை கீழாக நடத்தி கொடுமைப்படுத்தி வந்தார். மேலும், நகை கொண்டு வந்தால்தான், அவருடன் சேர்ந்து வாழ முடியும் என்றும் கூறினார், அதோடு அவரது அம்மாவும், தம்பியும், தங்கையும், தங்கை கணவரும் என்னை வார்த்தைகளால் பேசி, வருத்தி வந்ததோடு, நான் அவர்களது அதிகாரத்திற்கு கட்டுப்பட்டு நடக்கவில்லை என்றால், என்னை அவர்கள் வீட்டைவிட்டு வெளியே அனுப்பிவிடுவதாகவும் கூறி, மிரட்டி வந்தார்கள். மேற்சொன்ன அனைத்து சங்கதிகளில், எதிர்மனுதாரரின் தம்பி பொறுத்த சங்கதிகள் தவிர்த்து மற்றவற்றை நான், எனது முதன்மை விசாரணையிலோ, புகார் மனுவிலோ கூறவேயில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரரின் தங்கையோ, தங்கையின் கணவரோ அவர்களது வீட்டிற்கு வருவதே இல்லை என்றாலும், நான் மேற்சொன்னவாறு அவர்கள் பேசியதே இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது நாத்தனாரின் தலையீட்டினால்தான், எங்களது திருமணமான முதல் நாளிலிருந்தே பிரச்சனை உருவாகி பெரிதானது. எங்கள் திருமணத்திற்காக எனது வீட்டிலிருந்து போட்ட 13 சவரன் நகை என்னிடம் தான் உள்ளது என்றால், சரியல்ல என்னிடம் இல்லை. எனது வீட்டில் வண்டிக்காக எதிர்மனுதாரருக்கு கொடுத்த ரூ.62,500/- பணத்திற்கு மேலாக,

ரூ.30,000/- போட்டு, எதிர்மனுதாரர் இருசக்கர வாகனம் வாங்கியுள்ளார். எனவே, அந்த ரூ.30,000/-ஐ திருப்பி கொடுத்துவிட்டால், வண்டியை திருப்பி தர எதிர்மனுதாரர் தயாராகயிருந்தால், வண்டியை பெற்றுக்கொள்கிறேனா என்றால், நாங்கள் பணமாக தான் ரூ.62,500/-ஐ கொடுத்தோம், எனவே எங்களுக்கு மேற்படி நகைகளுடன் சேர்த்து, அந்த பணத்தை திருப்பி கொடுத்தால் போதும், வண்டி வேண்டாம். என்னை திருமணமானபொழுதில் வரதட்சணை கோரி, எதிர்மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் வற்புறுத்தியதாக நான் எனது முதல் விசாரணையிலும், புகார் மனுவிலும் குறிப்பிட்டுள்ள நிலையில், அதுப்பற்றி காவல் நிலையத்திலும், புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால், திருமணமானதிலிருந்து 3 மாதங்கள் கழித்து, அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 24.11.2021 அன்று வாய்மொழியாக புகார் அளித்துவிட்டு, அதனை தொடர்ந்து 26.02.2022 அன்று நிலையம் சென்று, நேரடியாக எழுத்துப்பூர்வமாக புகார் அளித்துள்ளேன்.

4. 24.11.2021 அன்று வாய்மொழியாக புகார் அளித்தது தொடர்பாக, போலிசார் எங்களை அழைத்து விசாரணை செய்தார்களா என்றால், செய்யவில்லை, அதனால்தான் அதனை தொடர்ந்து 26.02.2022 அன்று நிலையம் சென்று, நேரடியாக எழுத்துப்பூர்வமாக புகார் அளித்துள்ளேன், அதற்கு ரசீதும் அளிக்கப்பட்டுள்ளது. நான் மேற்படி புகார் கொடுத்ததோடு நின்றுவிட்டேன் என்றாலும், விசாரணைக்கு சரியாக சென்று ஒத்துழைக்கவில்லை என்றாலும், அதனால்தான் அந்த விசாரணை போலிசாரால் கைவிடப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் விசாரணைக்கு அவர்கள் அழைத்தபோதெல்லாம் சென்றும், அவர்கள் விசாரணை செய்யாமல் அனுப்விட்டு 15 நாட்கள் கழித்து வரச்சொன்னர்கள், அப்போது மீண்டும் நான் 15 நாட்கள் கழித்து சென்றபோதும், எவ்வித விசாரணையும் செய்யவில்லை, நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் விசாரணைக்கு அவர்கள் அழைத்தபோதெல்லாம் செல்லவேயில்லை என்றாலும், எனது புகாரில் உண்மைத்தன்னை இல்லை என்பதனாலும்தான், போலிசார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, எதிர்மனுதாரர் தரப்பில் என்னிடம் தங்களுக்கு போலிசில் செல்வாக்கு இருப்பதாகவும், என்னால் எதுவும் செய்யமுடியாது என்றும் பலமுறை கூறியுள்ளார், அதேபோல், அவர்கள் செல்வாக்கை பயன்படுத்தி நடவடிக்கை எதுவும் எடுக்காமல் செய்துவிட்டனர். எதிர்மனுதாரருக்கு சமையல் செய்யும் வேலை என்றாலும், அவருக்கு சீசன் சமயத்தில்தான், வேலை கிடைக்கும் என்றாலும், அதனால் அவருக்கு நான் கேட்டுள்ளதுபோல் பரிகாரம் அளிக்க போதிய வருமானம் இல்லை என்றாலும் சரியல்ல, எங்களது திருமணத்தின்போது, எதிர்மனுதாரர் அவருக்கு கீழ் 10 ஆட்களை வைத்து,

பிளம்பிங் மற்றும் எலக்ட்ரீஷியன் வேலை செய்வதாகவும், அதில் போதிய வருமானம் வருவதாகவும் கூறியதன் அடிப்படையில்தான் எங்கள் திருமணம் பேசி முடிவு செய்யப்பட்டது. அவரது வேலை குறித்து ம.த.சா.ஆ–1 ல், எங்கள் திருமண பத்திரிக்கையிலேயே பிளம்பிங் மற்றும் எலக்ட்ரீஷியன் வேலை என்று அவரது பெயர் அருகில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிளம்பிங் மற்றும் எலக்ட்ரீஷியன் வேலை என்றாலும் கூட வேலை கிடைத்தால்தான் வருமானம் என்றால் சரியல்ல. எனது புகார் மனுவிலும், முதன்மை விசாரணையிலும், கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றாலும், இந்த வழக்கினை எதிர்மனுதாரருக்கு எதிராக பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

5. எதிர்மனுதாரரோ, அவரது குடும்பத்தினரோ எந்த காலத்திலும், என்னிடம் நகை கேட்டு வற்புறித்தியதே இல்லை என்றாலும், என்னிடம் நகை கேட்டு, வாங்கி அதை வைத்துதான் வீடு கட்டவேண்டும் என்ற அவசியம் அவருக்கு இல்லை என்றாலும் சரியல்ல. எனது நோக்கம் பணத்தினை நோக்கி இருப்பதால்தான், எனது முதல் திருமணமும், 15 நாட்களுடன் முடிவடைந்து நிலைக்காமல் போய்விட்டது என்றாலும், அதனையே தான் நான் தற்போதும் செய்கிறேன் என்றாலும், அதனால்தான் சேர்ந்து வாழ வேண்டும் என்று எனது மனுவில் பரிகாரம் கோரவில்லை என்றாலும் சரியல்ல, எனது முதல் திருமணம் முடிவுற்றது பற்றி முழுமையாக கூறிதான், 2வது திருமணமே செய்துக்கொண்டோம். எனது திருமணம் ஆனது முதலாகவே திட்டுவதும், அசிங்கமாக பேசுவதுமாக இருந்தவர்கள், 24.11.2021 அன்று என்னை கழுத்தை நெறித்து அடித்த பின்னரும், அவருடன் சேர்ந்து வாழ்ந்தால், எனது உயிருக்கு உத்திரவாதம் இல்லை என்பதனால்தான் அத்தகைய பரிகாரத்தை நான் கேட்கவில்லை. 24.11.2021 அன்று என்னை கழுத்தை நெறித்து அடித்ததாக ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றாலும், அதனால்தான் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று புகார் மனு அளிக்கவில்லை என்றாலும், சரியல்ல. திருமணமான 2வது நாளே மாமியார் பின்வாசல் வழியாக, வரசொல்லி சாதாரணமாக சொன்ன சங்கதிகளை கேட்க பொறுக்காமல், சேர்ந்து வாழ விருப்பமில்லாமல், தனியாக போக வேண்டும் என்றும் கூறி சண்டையிட்டு, நான் பிரிந்து சென்றுவிட்டேன் என்றாலும், சரியல்ல, பிரச்சனையை ஆரம்பித்ததே அவர்கள்தான், எனது மாமியார் எனது முதல் திருமணத்திற்கு வாங்கிய பழைய பொருட்களை எடுத்து வந்ததனால், என்னை பின்வாசல் வழியாக, வரசொல்லி பிரச்சனையை ஆரம்பித்தார். நான் கேஸ் அடுப்பினை திறந்துவிட்டு, எதிர்மனுதாரர் என்னை கொலை செய்ய முயற்சி செய்தார் என்று, எனது புகார் மனுவிலும், முதல்

விசாரணையிலும் பொய்யா சொல்கிறேன் என்றால் சரியல்ல, எனது கணவர் அவ்வாறு கேஸ் அடுப்பினை திறந்துவிட்டு, எதிர்மனுதாரர் என்னை கொலை செய்ய முயற்சி செய்துவிட்டு, எங்கள் வீட்டிலிருந்து நான் இறந்த பிறகு, வரும்போது பெரிய மாலையாக வாங்கிபோட்டு, இங்கும், அங்கும் புரண்டு அழுவேன் என்று கூறினார். மேற்படி சங்கதிகளை நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், நான் பொய் சங்கதிகளை கூறி, நான்இவ் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், ஆகையால் இவ்வழக்கு தள்ளுபடிக்கு உரியது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**